Printed Matter

**MARTHANDAM DIOCESAN BULLETIN**
For Private Circulation Only



## மோண்சிஞ்ஞோர் ஜோசப் குழிஞ்ஞாலில் அடிகளாரின் விண்ணக வாழ்வின் 40-வது ஆண்டு

**ஆகஸ்ட் 23**

To

BOOK POST

If Undeliveried please return to ...
**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

# Bulletin

## Diocese of Marthandam

**மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்**



# மறைக்கல்வி தினம்

**ஆகஸ்ட் 06**

மலர் 20 ஆகஸ்ட் 2023 இதழ் 08


## இம்மாதம் நினைவு கூர

ஆகஸ்ட் 2023

1 – பதினைந்து நோன்பு ஆரம்பம்
புனித ஸ்மூனியும் ஏழு பிள்ளைகளும் குரு எலியாசரும்
புனித அல்போன்ஸ் லிகோரி
4 – குருக்களின் விண்ணகப் பாதுகாவலரான
புனித ஜாண் மரிய வியானி

4


6 – நம் ஆண்டவரின் உருமாற்றம்
மலங்கரை கத்தோலிக்க மறைக்கல்வி தினம்
8 – புனித டொமினிக்
9 – திருத்தூதர் மார் மத்தியாஸ்
10 – புனித லாறன்ஸ்
11 – இறைவாக்கினர் மீக்கா, புனித கிளாரா
12 – புனித சூசன்னா

6


13 – உருமாற்றத்திற்குப்பின் முதல் ஞாயிறு
மார் ஹிப்போளிட்டஸ், புனித ஜாண் பெர்க்மான்ஸ்
14 – புனித மாக்ஸிமிலியான் கோள்பெ
15 – சூனோயோ திருநாள்
பதினைந்து நோன்பு நிறைவு
மோறான் மோர் பசேலியோஸ் கிளீமீஸ் காதோலிக்கோஸ்
ஆண்டகையின் ஆயர் திருநிலைப்பாடு
இந்திய சுதந்திர தினம்

8


20 – உருமாற்றத்திற்குப்பின் இரண்டாம் ஞாயிறு
சமூக நீதி ஞாயிறு
புனித பெர்னார்டு

15



21 – திருதந்தை புனித பத்தாம் பத்திநாதர்
22 – அனனியா, அசரியா, மிசாவேல்.
23 – அந்தியோக்கியாயில் மார் ஒஸ்தாத்தியோஸ்
25 – புனித தீத்து
27 – உருமாற்றத்திற்குப்பின் மூன்றாம் ஞாயிறு
புனித மோனிக்கா
28 – புனித அகுஸ்தினார்
29 – திருமுழுக்கு யோவானின் தலை துண்டிக்கப்பட்டதன் நினைவு
புனித எவுப்றாசியா
30 – அரிமத்தியா ஊர் யோசேப்பும், நிக்கதேமும்



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

## MARTHANDAM DIOCESAN BULLETIN

TO SERVE THE LORD AND HIS PEOPLE

மலர். 20 ஆகஸ்ட் 2023 இதழ். 8

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

## BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM


*PATRON*

*His Excellency Most Rev. Vincent Mar Paulos*

*EDITOR*

*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

*COVER DESIGN*

*Mrs. Uni Kumari B.*

*PRINTING*

*Santhom Press,*
*Marthandam*

*PUBLISHED BY*

*The Chancellor*
*Diocese of Marthandam*




# குருக்கள் செய்திகள்

### மாதாந்திர தியானம்

மறைமாவட்ட குருக்களுக்கான மாதாந்திர தியானம் ஆயர் இல்லத்தில் வைத்து 05.07.2023 அன்று நடைபெற்றது. இத்தியானத்தை அருட்தந்தை ஸ்டான்லி விஜய் (குழித்துறை மறைமாவட்டம்) அவர்கள் வழிநடத்தினார்கள். தொடர்ந்து ஆயர் அவர்களின் அருளுரையோடு கூடுகை நிறைவுற்றது.

05.07.2023 அன்று மதியம் 2.30 மணிக்கு மறைமாவட்ட பணிக்குழு இயக்குனர்களுக்கான கூடுகை மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூடுகையில், பணிக்குழுக்கள் சிறப்புற நடைபெற வேண்டும் என்றும், புது பணி முயற்சிகள் எடுக்கவேண்டும் என்றும் ஆயர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. இறுதியாக பணிக்குழுக்களின் வளர்ச்சி குறித்த கலந்துரையாடலோடு கூட்டம் நிறைவுற்றது.

### ஆயரின் பெயர்விழா கொண்டாட்டம்

மறைமாவட்ட தினவிழா மற்றும் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் பெயர்விழாவுமாகிய ஜூன் 29-ம் நாள் அருட்தந்தையர்கள் ஆயரோடு கூட்டுத்திருப்பலி நிறைவேற்றி மறைமாவட்டத்திற்காக இறைவேண்டல் செய்தனர்.

அத்தோடு அதே நாள் மாலையில் அருட்தந்தையர்களுக்கான கூடுகை மார் எப்ரேம் கல்லூரியில் வைத்து நடைபெற்றது. இதில் ஆயர் மற்றும் அருட்தந்தையர்கள் பலர் கலந்து கொண்டு தங்கள் அன்பையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொண்டார்கள்.

# இளம் குருமடச் செய்திகள்

### புது குருக்கள் வருகை

ஜூன் மாதம் 19-ம் நாள் மார்த்தாண்டம் மறைமாவட்ட புதுக்குருக்கள் இளம்குருமடத்தில் திருப்பலி நிறைவேற்றி சிறப்பித்தார்கள். இளம்குருமட அருட்சகோதரர்கள் புதுக்குருக்களை வாழ்த்தி மகிழ்ந்தார்கள்.

### ஆஸ்திரேலிய விருந்தினர்கள் வருகை

ஆஸ்திரேலிய சிறப்பு விருந்தினர்கள் ஜூன் 14-ம் தேதி அன்று இளம்குருமடத்திற்கு வருகை புரிந்து வகுப்புகள் எடுத்தும் அருட்சகோதரர்களோடு கலந்துரையாடியும் அவர்களை ஊக்கப்படுத்தினர்.

# மறைமாவட்ட தினவிழா மற்றும் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் பெயர்விழா கொண்டாட்டம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட தினம் மற்றும் மேதகு ஆயர் Dr.வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் பெயர்விழா கொண்டாட்டத்தின் சிறப்பு விருந்தினர்கள் கூடுகை 28.06.2023 அன்று குழித்துறை மார் எப்ரேம் வளாகத்தில் காலை 11.00 மணிக்கு ஆரம்ப ஜெபத்துடன் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மறைமாவட்ட குருகுல முதல்வர் Msgr. ஜோஸ் பிறைட் அவர்கள் அனைவரையும் வாழ்த்தி வரவேற்றார்கள். நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தக்கலை மறைமாவட்ட ஆயர் மேதகு மார் ஜார்ஜ் ராஜேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் திரு. விஜய் வசந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ராஜேஷ் குமார், திரு. ர.பி. பிறின்ஸ், ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி முன்னாள் முதல்வர் Dr. ஜேம்ஸ் R. டேனியேல் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டு மேதகு ஆயர் அவர்களுக்கு வாழ்த்துக்களுடன், வாழ்த்துரையும் வழங்கினார்கள். இறுதியாக, மேதகு ஆயர் அவர்கள் ஏற்புரை வழங்கி நன்றிகளும் தெரிவித்தார்கள். நிகழ்ச்சிகளை மறைமாவட்ட நிதி அலுவலர் பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் தொகுத்து வழங்கி, வருகை தந்த அனைவருக்கும் நன்றி கூற அன்பு விருந்துடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றது. நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், பொதுநிலையினர், மறைமாவட்ட நிறுவனங்கள் மற்றும் பக்த இயக்கங்கள், மேய்ப்பு பணி உறுப்பினர்கள் சார்பாக பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



29.06.2023 அன்று நமது ஆயர் மேதகு வின்செனட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் பெயர்விழா மற்றும் மறைமாவட்ட தினத்தையொட்டி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் மார்த்தாண்டம் கிறிஸ்து அரசர் பேராலயத்தில் 8.30 மணிக்கு மறைமாவட்ட அருட்தந்தையர்கள் இணைந்து கூட்டுத்திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தனர். தொடர்ந்து மேதகு ஆயர் அவர்களின் நாமவிழா வாழ்த்துக்கூட்டம் நடைபெற்றது. வாழ்த்துக்கூட்டத்தில், குருகுல முதல்வர் வருகை தந்த அனைவரையும் வரவேற்றார்கள். அருட்தந்தையர்கள் சார்பாக அருட்தந்தை அருள் ஷைஜூ, பொதுநிலையினர் சார்பாக திருமதி ஏஞ்சல் ஆகியோர்கள் வாழ்த்துரை வழங்கினர். வாழ்த்து கூட்டத்தில் குழித்துறை நகர்மன்ற தலைவர் பொன் ஆசைதம்பி மற்றும் குழித்துறை நகராட்சி ஆணையர் அவர்களும் கலந்து கொண்டனர். தொடர்ந்து மேதகு ஆயர் அவர்கள் ஏற்புரை வழங்கினார்கள். இந்நிகழ்வில் மறைமாவட்ட மலங்கரை விளக்கு மாத இதழ் மெகா பரிசு போட்டியில் வெற்றி பெற்ற 2 நபர்களுக்கு முதல் மற்றும் 2-ம் பரிசுகள் வழங்கப்பட்டது. மறைமாவட்ட செயலர் பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் நன்றி கூற தொடர்ந்து மறைமாவட்ட பங்குகள், நிறுவனங்களின், பிரதிநிதிகள் மற்றும் தனி நபர்களின் வாழ்த்துக்களுடன் மேதகு ஆயரின் Charity Fund -க்கான அன்பளிப்புகளும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், இறைமக்கள் கலந்து கொண்டு மேதகு ஆயர் அவர்களுடன் ஜெபித்து வாழ்த்துக்களும் தெரிவித்துக் கொண்டனர். தொடர்ந்து அன்பு விருந்துடன் கூட்டம் நிறைவுபெற்றது.

# இறை ஊழியர் மார் இவானியோஸ் ஆண்டகையின் 70-வது நினைவு பாதயாத்திரை

இறை ஊழியர் மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவு பாதயாத்திரை ஜூலை மாதம் 13-ம் தேதி வியாழக்கிழமை அன்று கிறிஸ்து அரசர் பேராலயம், மார்த்தாண்டத்தில் காலை 6 மணிக்கு மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் திருப்பலியுடன் ஆரம்பமானது. இதில் நம் மறைமாவட்ட குருக்கள், அருட்கன்னியர்கள், குரு மாணவர்கள், இளையோர்கள் மற்றும் இறைமக்கள் பக்தியுடனும் ஆர்வத்துடனும் பங்கேற்றனர்.

பாதயாத்திரையானது காலை உணவிற்கு பின் 9 மணியளவில் ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையில் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் பிறைட் அவர்களின் முன்னிலையில் கிறிஸ்து அரசர் பேராலயத்தில் ஆரம்பமானது. தொடர்ந்து பாதயாத்திரை அங்கிருந்து படந்தாலுமூடு மலபார் ஆலயத்தை சென்றடைந்தது. பின், களியக்காவிளை CSI ஆலயத்தில், மலங்கரை கத்தோலிக்க கல்லூரி சார்பாக பாதையாத்திரியர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டது. தொடர்ந்து பாதயாத்திரையானது மதியம் 12 மணியளவில் பாறசலையில் அருவங்கோடு ஆலயத்தில் வந்தடைந்தது. இறுதியாக மாலை 6 மணியளவில் பாலராமபுரத்தை சென்றடைந்தது.

இரண்டாவது நாள் ஜூலை 14 வெள்ளிக்கிழமையன்று காலை 6 மணிக்கு பாலராமபுரம் தேவாலயத்தில் மறைமாவட்ட MCYM இயக்குநர் ஜோணி ஆல்பிரட் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினர். காலை உணவுக்கு பின் 9 மணியளவில் பாதயாத்திரை மீண்டும் ஆரம்பமானது. பின்னர் மதியம் 12 மணியளவில் பாதயாத்திரையானது தமலம் தேவாலயத்தை வந்தடைந்தது. இறுதியாக மாலை 5 மணியளவில் பட்டம் பேராலயத்தை சென்றடைந்தது. மறைமாவட்ட MCYM இயக்குநர், அருட்தற்தை ஜோணி ஆல்பிரட் அவர்கள் சிலுவையை மார் இவானியோஸ் ஆண்டகையின் கல்லறையில் ஒப்படைத்தார்கள். அன்றைய தினம் இரவு கர்தினால் மோறோன் மோர் பசேலியோஸ் கிளீமிஸ் காதோலிக்கோஸ் அவர்கள் தலைமையில் அனைத்து ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், இளையோர்கள், இறைமக்கள் என அனைவரும் இணைந்து மெழுகுவர்த்தி பவனியில் பக்தியுடன் பங்கேற்றனர்.

மூன்றாம் நாள் ஜூலை 15-ம் தேதி காலை 8.30 மணியளவில் பட்டம் பேரலயத்தில் வைத்து காலை ஜெபமும், ஆடம்பர கூட்டுத்திருப்பலியும் கல்லறையில் தூப மன்றாட்டும் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் நம் மறைமாவட்ட ஆயர், அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், அருட்சகோதரர்கள் மற்றும் இறைமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மறைக்கல்வி செயற்குழு உறுப்பினர்களின் கூடுகை

மறைக்கல்வி பணிக்குழு உறுப்பினர்களின் கூடுகை 19.07.2023 அன்று தாபோர் தியான இல்லம், குழித்துறையில் வைத்து நடத்தப்பட்டது. மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை ஷிஜூ ஜோஸ் அவர்களின் தலைமையில் இணை இயக்குநர் அருட்தந்தை ஜோஸ் கிராத்தூர், ஆன்மீக வழிகாட்டி அருட்சகோதரி அருள் மரியா ஆகியோரின் முன்னிலையில் இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்கள் பன்னிரெண்டு நபர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

இக்கூடுகையில் ஓராண்டு மறைக்கல்வி நிகழ்வுகள் குறித்தும், மறைக்கல்வி மாணவர்கள் தாங்கள் கற்றுக்கொள்வதை வாழ்க்கைப் பாடமாக மாற்ற எத்தகைய பயிற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. அத்தோடு மறைவட்ட மறைக்கல்வி பொறுப்பாளர்கள், தங்களின் மறைவட்டம் சார்ந்த பங்குகளில் நடைபெறும் மறைக்கல்வி வகுப்புகளை பார்வையிட்டு அதன் அறிக்கையை மறைமாவட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், பாடதிட்டக் குறிப்புகள் மற்றும் பயிற்சி வினாவிடைகள் அடங்கிய ஆசிரியர் கையேடு தயாரிக்க வேண்டும் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## தேனீ வளர்ப்பு மற்றும் தேன் தயாரிப்பு திட்டம்

மிட்ஸ் நிறுவனத்தின் புது முயற்சியாக தேனீ வளர்ப்பு மற்றும் தேன் தயாரிக்கும் திட்டம் துவங்கப்பட்டள்ளது. இதற்கான துவக்க விழாவானது 30.06.2023 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் விழாவிற்கு தலைமை வகித்து தலைமை உரையாற்றினார்கள். திட்டத்தின் நோக்கம் குறித்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் விளக்கமளித்தார்கள். திரு. S.J.R.K. தாஸ் அவர்கள் சிறப்பு செய்தி அளித்தார்கள். இந்த திட்டத்தின் வழியாக வழங்கப்படும் தொகையினை வைத்து பயனுள்ள முறையில் வெற்றிகரமாக தொழில் செய்ய வேண்டும் என்று பயனாளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. பின்னர் திரு. லாசர் அவர்கள் தேன் வளர்ப்பு தொழில் குறித்த பயிற்சியினை பயனாளிகளுக்கு வழங்கினார்கள். பின்னர் ஆயர் அவர்கள் வட்டியில்லா கடனாக நபருக்கு ரூபாய் 20,000/- வீதம் 10,20,000/-க்கான காசோலைகளை 51 பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

## நலத் திட்ட உதவிகள்

30.06.2023 அன்று கோல்பிங் சிறப்பு சிறு தொழில் திட்டத்தின் வழியாக கோல்பிங் குடும்பங்களில் உள்ள 10 உறுப்பினர்களுக்கு ரூபாய் 4,00,000/- கடன் உதவி வழங்கப்பட்டது.

12.07.2023 அன்று All for Life திட்டத்தின் வழியாக மிட்ஸ் சுய உதவி குழுக்களில் உள்ள 7 உறுப்பினர்களுக்கு பல்வேறு சுய தொழில்கள் செய்ய ரூபாய் 49,000/- கடன் உதவி வழங்கப்பட்டது.

12.07.2023 அன்று All for Life திட்டத்தின் வழியாக மிட்ஸ் தளிர்கள் உலக திட்டத்தின் 12 பயனாளிகளுக்கு சிறப்பு உதவித் தொகையாக ரூபாய் 1,32,840/- வழங்கப்பட்டது.

12.07.2023 அன்று Forderverein திட்டத்தின் வழியாக மிட்ஸ் தளிர்கள் உலக திட்டத்தில் உள்ள ஒரு பயனாளியின் குடும்பத்திற்கு சிறு தொழில் செய்ய ரூபாய் 7,000/- வழங்கப்பட்டது.



## பிற நிகழ்வுகள்

01.07.2023 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட 11 பயனாளி குடும்பங்களில் உள்ள பெற்றோர் மற்றும் குழந்தைகளுக்கு வழிகாட்டுதல் பயிற்சி நடத்தப்பட்டது. மிட்ஸ் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்கள் மிட்ஸின் செயல்பாடுகள் மற்றும் தளிர்கள் உலக திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தார்கள். இந்த பயிற்சியில் 11 மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு புதிய வங்கி கணக்கு துவங்கப்பட்டு இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டனர்.

01.07.2023 அன்று CTWWC விண்ணைத் தொடு குழந்தைகள் நல பாதுகாப்பு திட்டத்தின் வழிகாட்டுதலில் உலகளாவிய பெற்றோர் தினம் கொண்டாடப்பட்டது. நடைக்காவு ஆலயத்தில் வைத்து நடைபெற்ற இந்த நிகழ்வில் அருட்தந்தை அருள்தாஸ், மிட்ஸ் திட்ட அலுவலர், CTWWC திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் களப்பணியாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

06.07.2023 மற்றும் 12.07.2023 ஆகிய தினங்களில் குடும்ப வளர்ச்சி திட்டத்தின் கிளஸ்டர் கூட்டங்கள் ஜார்ஜ் நகர் மற்றும் மார்த்தாண்டம் ஆலயங்களில் வைத்து நடத்தப்பட்டன. இந்த கூட்டங்களில் குடும்ப வரவு செலவு உருவாக்குவது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த கூட்டங்களில் மொத்தம் 29 பயனாளிகள் கலந்து கொண்டனர்.

10.07.2023 அன்று நடைக்காவு ஆலயத்தில் வைத்து ஆரி தையல் கலை பயிற்சியின் நிறைவு விழா கூட்டம் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பயிற்சியில் கலந்து கொண்ட 35 உறுப்பினர்களுக்கு பாராட்டுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

10.07.2023 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்களால் மிட்ஸ் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கான ஒரு மாத கால அழகு கலை பயிற்சி துவங்கி வைக்கப்பட்டது. இந்த பயிற்சியில் 36 உறுப்பினர்கள் கலந்து கொண்டு பயன் பெற்று வருகின்றனர்.

# MCYM
*Youth Apostolate*

இறை ஊழியர் பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவு பாதயாத்திரை ஜூலை 13-ஆம் தேதி மார்த்தாண்டம் கிறிஸ்து அரசர் பேராலயத்தில் வைத்து காலை 6 மணிக்கு மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் திருப்பலியுடன் ஆரம்பமானது. குருக்கள் அருட்கன்னியர்கள், குரு மாணவர்கள், இளையோர்கள் மற்றும் இறைமக்கள் இந்த பாதயாத்திரையில் பங்கேற்றனர். ஜூலை 14 மாலை 4 மணி அளவில் பாதயாத்திரையானது பட்டம் பேராலயத்தில் அமைந்துள்ள மார் இவானியோஸ் ஆண்டகையின் கல்லறையை சென்றடைந்தது. பின்னர் அங்கு மெழுகுவர்த்தி பவனியும், மறு நாள் காலை திருப்பலியும் நடைபெற்றது. இந்த பாதயாத்திரை நிகழ்வுகளை மலங்கரை கத்தோலிக்க இளையோர் இயக்கம் முன்னின்று வழிநடத்தியது. அத்தோடு, ஏராளமான இளையோர் இந்நிகழ்வுகளில் பங்கெடுத்தனர்.

## மார்த்தாண்டம் மறைவட்ட மேய்ப்பு பணி அறிவுரை குழுக்கூட்டம்

மார்த்தாண்டம் மறைவட்ட மேய்ப்பு பணி அறிவுரை குழுக் கூட்டமானது 16.07.2023 அன்று கிறிஸ்து அரசர் பேராலயத்தில் வைத்து மறைவட்ட முதன்மை குரு மோண்சிஞ்ஞோர் ஜோஸ் பிறைட் அவர்களின் தலைமையில் மாலை 4.00 மணிக்கு ஜெபத்துடன் ஆரம்பமானது. செயலர் மற்றும் பொருளர் அறிக்கை வாசித்து சமர்ப்பிக்கப்பட்டது. இதில் மார்த்தாண்டம் மறைவட்ட குருக்கள், அருட்கன்னியர்கள் மற்றும் மறைவட்ட மேய்ப்பு பணி அறிவுரைக் குழு உறுப்பினர்கள் பங்கெடுத்தனர். இக்கூட்டத்தில், மார்த்தாண்டம் மறைவட்ட தினவிழா கொண்டாட்டம் 06.08.2023 அன்று நடத்தவேண்டுமென்றும், "இயற்கையை காப்போம் நெடுநாள் வாழ்வோம்" எனும் மைய சிந்தனையில் பேரணி மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஒவ்வொரு பங்குகள் சார்பாக நடத்தவேண்டுமென்றும் ஆலோசிக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.



# HEALTH FOR ONE MILLION (HOM)
## Diocese of Marthandam

HOM இயக்குநராக 3 ஆண்டுகள் பணியாற்றிய அருட்தந்தை ராபர்ட் அவர்கள் பணி மாறுதல் அடைந்ததையடுத்து HOM புதிய இயக்குநராக அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் 30.06.2021 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார்கள். அதற்கான நிகழ்ச்சிகள் அருட்தந்தை ராபரட் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. HOM பணியாளர்கள் அனைவரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

உலக சுற்றுச்சூழல் தினத்ததை முன்னிட்டு மார்த்தாண்டம் மறைமாவட்ட நலவாழ்வு அமைப்பான HOM சார்பாக ஜூன் மாதம் 21-ம் தியதி மார்த்தாண்டம், நாகர்கோவில், கொட்டாரம், கன்னியாகுமரி ஆகிய அலகுகளைச் சார்ந்த சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு 1000/- மரக்கன்றுகள் HOM இயக்குநர் அருட்தந்தை ராபர்ட் அவர்கள் தலைமையில் வழங்கப்பட்டது.

மார்த்தாண்டம் மறைமாவட்ட நலவாழ்வு அமைப்பான HOM சார்பாக 50 சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு HOM பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஆடுகள் வழங்கப்பட்டது.

மார்த்தாண்டம் மறைமாவட்ட நலவாழ்வு அமைப்பான HOM சார்பாக மரியாகிரி மலங்கரை கத்தோலிக்க கல்லூரியில் படிக்கும் குலசேகரத்தை சார்ந்த ஸோனு என்ற மாற்றுத்திறனாளி மாணவனுக்கு கல்வி உதவித் தொகையாக 40,000/- ரூபாய் அருட்தந்ததை ராபர்ட் அவர்களால் வழங்கப்பட்டது.

HOM அலுவலக பணியாளர்கள் மற்றும் ஆர்கனைசர்களின் மாதாந்திர ஆலோசனை கூட்டம் 06.07.2023 அன்று HOM அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை அஜீஷ்குமார் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் நடைபெற்றது. HOM பணியாளர்கள் அனைவரும் கலந்து கொணடனர். திருமதி லதா அவர்கள் அறிக்கை வாசித்தார்கள். HOM கணக்காளர் திருமதி செல்வி அவர்களால் கணக்கு சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் HOM வழியாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும் புதிய குழுக்கள் துவங்கி ICICI வங்கி வழியாக கடன் பெற்று குழுக்களுக்கு வழங்க வேண்டும் என்று இயக்குநர் அவர்களால் வலியுறுத்தப்பட்டது.

HOM மார்த்தாண்டம் அலகைச் சார்ந்த பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் சார்பாக வருடாந்திர கூட்டம் மற்றும் மகளிர் தின கொண்டாட்டம் உண்ணாமலைக்கடை மலங்கரை கத்தோலிக்க ஆலய வளாகத்தில் வைத்து 17.07.2023 அன்று நடைபெற்றது. HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ்குமார் அவர்கள் தலைமை வகித்தார்கள். திருமதி லதா அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள். முன்னாள் இயக்குநர் அருடதந்தை ராபர்ட் அவர்கள் மகளிர் தின நிகழ்வுகள் குறித்து உரையாற்றினார்கள். மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திருமதி விஜி கலா அவர்கள் மகளிர் நலன் மற்றும் மகளிர் பாதுகாப்பு குறித்து உரையாற்றினார்கள். அருட்தந்தை பென்னட் அவர்கள் மகளிர் மனநலன் குறித்து சிறப்புரையாற்றினார்கள். கொட்டாரம் அலகின் அமைப்பாளர் திருமதி முத்துலெட்சுமி அவர்கள் சுயஉதவிக் குழுக்கள் வழியாக நடைபெறும் மருத்துவ உதவிகள் குறித்து விளக்க உரையாற்றினனார்கள். இறுதியில் HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ்குமார் அவர்கள் தலைமயுரையாற்றினார்கள். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை மார்த்தண்டம் அலகின் அமைப்பாளர் திருமதி புஷ்பலதா மற்றும் தச்சன்விளாகம் குழுக்களின் பொருளாளர் திருமதி பெல்லா மற்றும் உறுப்பினர்கள் செய்தனர்.

**மார்த்தாண்டம் மெடிக்கல் மிஸன் (MMM)**

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் கீழ் இயங்கும் மார்த்தாண்டம் மெடிக்கல் மிஷன் சார்பாக பேதுருவின் கரங்கள் என்னும் மாதாந்திர மருத்துவ உதவித் திட்டம் செயல்பட்டு வருகிறது தற்போது 41 நிரந்தர நோயாளிகளுக்கு மாதம் 1000 ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. ஆகஸ்ட் மாதத்திற்குரிய உதவித்தொகை 20.07.2023 அன்று HOM அலுவலக வளாகத்தில் வைத்து அருட்தந்தை HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ்குமார் அவர்கள் தலைமையில் வழங்கப்பட்டது.

மார்த்தாண்டம் மெடிக்கல் மிஷன் ஆலோசனைக் கூட்டம் 20.07.2023 வியாழன் அன்று இயக்குநர் அருட்தந்தை அஜீஷ்குமார் முதன்மை குரு மோண். S. வர்கீஸ் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் HOM அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இயக்குநர் அருட்தந்தை அஜீஷ்குமார் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். செயலர் ஜாண்



அவர்கள் அறிக்கை வாசித்தார்கள். மார்த்தாண்டம் மெடிக்கல் மிஷன் வழியாக செயல்படும் மாதாந்திர மருத்துவ உதவித் திட்டதிற்கு நிதி உருவாக்குவதற்கு வேண்டிய பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதற்காக நன்கொடையாளர்களை சந்திக்கவும் முடிவு செய்யப்பட்டது. மேலும் மறைமாவட்டத்தின் அனைத்து மருத்துவர்கள் மன்றத்தை 2023 செப்டம்பர் 3-ம் தியதி கூட்டவும் முடிவுசெய்யப்பட்டது. MMM வழியாக செயல்படுத்தி வரும் Ambulance சேவையை மேம்படுத்துவதற்கு வேண்டிய வழிமுறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் திரு.பால்ராஜ், திரு. வர்கீஸ், அருட்சகோதரி பிளவர் ஜாண், அருட்சகோதரி ஐஸ்வர்யா மற்றும் MMM பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# புனித வின்செண்ட் தே பவுல் சபை

## மார்த்தாண்டம் மத்திய சபை

வின்செட் தே பவுல் சபை, மார்த்தாண்டம் மத்திய சபைக்குட்பட்ட நாகர்கோவில் வட்டார சபை தலைவராக சகோ. மனோகர் பொறுப்பேற்றார். 16-07-2023 ஞாயிறு மதியம் 2.30 க்கு கிறிஸ்துவிளாகம் ஆலயத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. மத்திய சபை ஆன்மிக ஆலோசகர் பேரருட்தந்தை G. வர்கீஸ் அவர்கள் தலைமையில் அருட்தந்தை வில்பிரைட் அவர்களின் முன்னிலையில் இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மத்திய சபை தலைவர் சகோ இயேசுராஜன், செயலர் சகோ வர்கீஸ், விரிவாக்க அலுவலர் சகோ மோகனன், மகளிர் பிரதிநிதி சகோதரி அல்போன்ஸா, சகோதரி சல்மா மற்றும் வட்டார சபை பொறுப்பாளர்கள், கிளைசபை பொறுப்பாளர்களும் கலந்துகொண்டார்கள்.

மார்த்தாண்டம் மத்திய சபைக்குட்பட்ட பனச்சமூடு வட்டார சபை தலைவராக சகோ அனீஷ் 04-06-2023 அன்று பொறுப்பேற்றார். இந்நிகழ்விற்கு பேரருட்தந்தை மைக்கிள் முக்கம்பாலத் தலைமையில் மத்திய சபை தலைவர் சகோ இயேசுராஜன், விரிவாக்க அலுவலர் சகோ மோகனன் ஆகியோர் முன்னிலையில் இக்கூட்டம் நடைபெற்றது. வட்டார சபை பொறுப்பாளர்கள் கிளைசபை பொறுப்பாளர்களும் கலந்துகொண்டார்கள்.

# மலங்கரை கத்தோலிக்க கல்லூரி
## மரியகிரி

**1. முதலாமாண்டு துவக்கவிழா**

கல்லூரியின் 26 வதுஆண்டு துவக்கமும் 2023-'24-ம் கல்வியாண்டின் முதல்நாளுமாக 26.06.2023 அன்று கல்லூரி வகுப்புகள் துவங்கப்பட்டது. கல்லூரி தாளாளர் அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். கல்லூரி நிதிகாப்பாளர் அருட்தந்தை வினு இம்மானுவேல் அவர்களால் சிறப்பு ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் தம்பி தங்க குமரன் தலைமையுரையாற்றினார்கள். முதலாமாண்டு கல்லூரியில் இணைந்த அனைத்து மாணவர்களுக்கும் வரவேற்பு அளிக்கப்பட்டது. முன்னதாக 21.06.2023 அன்று இளங்கலை இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டிற்கான வகுப்புகள் துவங்கப்பட்டது.

**2. வணிக மேலாண்மையியல் துறை**

வணிக மேலாண்மையியல் துறை மூன்றாமாண்டு பயிலும் முகமது சலீம் இந்தியா அளவில் நடைபெற்ற பளுதூக்குதல் போட்டியில் கலந்துகொண்டு தங்க பதக்கம் பெற்றார்.

**3. பல்கலை கழக பட்டமளிப்பு விழா**

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழக 29-வது பட்டமளிப்பு 18.07.2023 அன்று நடைபெற்றது. கல்லூரியை சார்ந்த 5 மாணவர்கள் தங்க பதக்கம் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர். முதுகலை நுண்ணுயியல் துறையைசார்ந்த சுஜித்ரா, முதுகலை சமூக துறையை சார்ந்த அருட்சகோதரி செலின், முதுகலை நிலத்தியல் துறையை சார்ந்த பெபின் ஜாஸ்மிதா, முதுகலை உயிர் வேதியியல் துறையை சார்ந்த நீது, இளங்கலை உயிர் தொழில் நுட்ப துறையை சார்ந்த அபிராமி ஆகியோர்கள் ஆவர்.

**4. மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவு பாதயாத்திரை**

மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவு பாதயாத்திரையானது மார்த்தாண்டம் முதல் திருவனந்தபுரம் வரை நடைபெற்றது. கல்லூரி மாணவர்கள் திரித்துவபுரம் தூய மூவொரு இறைவன் தேவாலயத்திலிருந்து பாறசாலை வரை பாதயாத்திரை மேற்கொண்டனர்.



# MALANKARA SCHOOL OF COMMERCE
## Mariagiri, Kulapuram

மார்த்தாண்டம் மறை மாவட்டத்தின் கீழ் இயங்கி வரும் Malankara School of Commerce கல்லூரியில் மே 2023 நடைபெற்ற CA Intermediate தேர்வில் 5 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். வெற்றி பெற்ற மாணவர்களை கல்லூரி நிர்வாகம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பாராட்டினர்.

# ST. PAUL'S EDUCATION ACADEMY
## Kanyakumari, Kuzhithurai, Mariagiri
### DIOCES OF MARTHANDAM

மார்த்தாண்டம் மறை மாவட்டத்தில் இயங்கி வரும் புனித பவுல் கல்வி நிறுவனத்தில் அரசு வேலைக்கான பயிற்சிகள் குழித்துறை மேய்ப்பு பணி நிலைய வளாகம் மற்றும் மரியாகிரி மலங்கரை ஸ்கூல் ஆப் காமர்ஸ் வளாகத்திலும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

தற்போது பள்ளி மாணவர்களுக்கான திறனை மேம்படுத்தும் வகையில் சிறப்பு பயிற்சி வகுப்பானது கிறிஸ்துராஜபுரம் எம்.ஜெ.கெ.எம். எம்.எஸ்.சி. மேல்நிலைப்பள்ளியில் 22.07.2023 -ம் தேதியில் தொடங்கப்பட்டுள்ளது.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**ஆகஸ்ட்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 18, 19 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# கொமித்சியச் செய்திகள்

## மார்த்தாண்டம் கொமித்சியம் நடத்தும் கருத்தரங்கு

*அன்பார்ந்த அருள்தந்தையர்களே, அருட்கன்னியர்களே, சேனையாளர்களே தூய அமலோற்பவ அன்னையின் பெயரால் வணக்கங்களையும், ஜெபங்களையும் அன்போடு தெரிவித்துக் கொள்கின்றோம்.*

நமது மார்த்தாண்டம் கொமித்சியம் 25-வது ஜூபிலி ஆண்டில் பயணிக்கின்றது. இதை ஒட்டி நடத்தப்படுகின்ற சிறப்பு கருத்தரங்கானது 29-07-2023 அன்று காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை குழித்துறை தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடைபெறுகிறது. மேலும் மணிபூர் மாநில அமைதிக்காக சிறப்பு நற்கருணை ஆராதனையும் நடைபெறும். அன்னை மரியாவின் விண்ணேற்பு பெருவிழாவை ஒட்டி கடைபிடிக்கப்படும் 15 நோன்பை அர்த்தமுடன் கடைபிடிக்கவும், மரியாயின் சேனை பற்றி அதிகம் அறிந்து கொள்ளவும், மணிப்பூர் மக்களுக்காக ஜெபிக்கவும், இவ்வாய்ப்பை பயன்படுத்தி சேனையாளர்கள் மிகுந்த ஆர்வமுடன் பங்கேற்க அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

### நிகழ்வுகள்

| | |
|---|---|
| காலை 9.30 மணி | : **பெயர் பதிவு** |
| காலை 9.45 மணி | : **சேனை ஆரம்பஜெபம், ஜெபமாலை** |
| காலை 10.00 மணி | : **விண்ணில் பூத்த மண்ணின் மலர்** |
| வழங்குபவர் | : **Rev. Fr. அபின்சன்** (பங்குதந்தை, பார்வதிபுரம்) |
| காலை 11.30 மணி | : **பிரசீடியங்கள் பார்வையிடும்போது கவனிக்கப்பட வேண்டியவை & பிரசீடியங்களில் இருக்கும் ஏடுகள்** |
| வழங்குபவர் | : **Br. V. ஏசுராஜ்** (கொமித்சிய முன்னாள் தலைவர்) |
| மதியம் 12.30 மணி | : **சிறப்பு நற்கருணை ஆராதனை** (மணிப்பூர் மாநில மக்களுக்காக) |





### வெள்ளிவிழா ஆண்டின் துவக்கம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வரும் ஹோம் அறிவுசார் குறைபாடுடையோருக்கான சிறப்புப் பள்ளியில் **தமிழகத்திலேயே முதன்முறையாக சிறப்புக் குழந்தைகளுக்காக சிறப்பம்சங்களுடன் வடிவமைக்கப்பட்ட பள்ளிபேருந்து துவக்க விழா** 27-06-2023 செவ்வாய்க்கிழமை அன்று காலை 11 மணியளவில் நடைபெற்றது. மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள், ரிப்பன் வெட்டி, திறந்து, பள்ளி வாகனத்தை அர்ச்சித்து ஆசீர்வதித்தார்கள். சிறப்பு மிகு பள்ளி வாகனம் அன்பளிப்பாக வழங்கிய MCX நிறுவனத்தின் துணைத்தலைவரும் தென் இந்தியாவின் தலைவருமான திரு. N.K. முத்தப்பா அவர்கள் வாகனத்தை பயன்பாட்டிற்கு வழங்கி சிறப்பித்தார். மாண்புமிகு நீதிபதி எம். ஜெய்சங்கர் அவர்கள் ஹைட்ராலிக் ரேம்பை இயக்கி வைத்தார்கள். தொடர்ந்து நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஹோம் இயக்குநரும் தாளாளருமாகிய அருட்தந்தை. இராபர்ட் அவர்கள் அறிமுக உரையோடு அனைவரையும் வரவேற்றார்கள். சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் ஜூபிலி ஒளியேற்றினார்கள். சிறப்பு விருந்தினர்களை சிறப்புக் குழந்தைகள் நெற்றி திலகமிட்டு பொன்னாடை அணிவித்து பூங்கொத்து வழங்கி வரவேற்றார்கள். துறையூர் நீதிமன்ற சார்பு நீதிபதி மாண்புமிகு ஜெய்சங்கர் அவர்களும் MCX-ன் துணைத்தலைவரும் தென் தமிழக தலைவருமான திரு. N.K. முத்தப்பா அவர்களும் பாராளுமன்ற உறுப்பினர் திரு. V. விஜய்வசந்த்

எம்பி அவர்களும் மார்த்தாண்டம் மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை. மோண்சிஞ்ஞோர். ஜோஸ்பிறைட் அவர்களும் சிறப்புரை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து மாவட்ட மாற்றுத்தினாளிகள் நல அலுவலர் திரு. சிவசங்கரன் எம்.ஏ அவர்களும் மேரி மக்கள் கன்னியர் சபையின் மிஷன் கவுன்சிலர் அருட்சகோதரி பெனடிக்ட் பிரான்ஸிஸ் டி.எம். அவர்களும், டெப்கோ நியூமேடிக்ஸ் பிரைவேட் லிமிடெட்ன் நிர்வாக இயக்குநர் திரு. சுதாகர் அவர்களும், பாரத் பென்ஸ் டீலர் மதுரை ஜெயராஜ் டிரக்ஸ்ரூ பஸ் பி.லிட் இணை துணைத் தலைவர் திரு ஆர் சங்கர் அவர்களும், தக்கலை ரெஸ்பி இன்போ டெக்னாலஜீஸ்-ன் இன் நிர்வாக இயக்குநர் வினு அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். விழாவிற்கு தலைமை தாங்கிய மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையுரை ஆற்றினார்கள். தொடர்ந்து இன்பேன்ட் நடனப் பள்ளி இயக்குநர் மாஸ்டர் அருள் அவர்கள் திறமைத் திருவிழா '23-க்கான வெற்றியாளர்களை அறிவித்தார். விருந்தினர்கள் பரிசினை வழங்கினார்கள். நிகழ்ச்சியின் இடையிடையே சிறப்புக் குழந்தைகளின் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நடைப்பெற்றது. ஹோம் சிறப்புப் பள்ளி தலைமையாசிரியர் திரு. டென்னிஸ் அவர்கள் நன்றியுரை கூறினார்கள். இச்சிறப்பு மிகு நிகழ்வில் சுமார் 500-க்கு மேற்பட்டோர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சியின் இறுதியில் சிறப்பாசிரியர்கள் நாட்டுபண் பாடினார்கள். சிறப்புப் பள்ளி பேருந்து தமிழகத்திலேயே முன்மாதிரி திட்டமாக துவக்கி வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



# மறைவட்ட செய்திகள்

## குலசேகரம் மறைவட்டம்

குலசேகரம் மறைவட்ட குருக்களுக்கான கூடுகையானது 24.06.2023 அன்று ஆற்றூர் Matrix இல்லத்தில் வைத்து மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்களின் தலைமையில் ஜெபத்துடன் ஆரம்பமானது. இக்கூடுகையில் மறைவட்ட வளர்ச்சி பற்றிய கருத்துக்கள் பரிமாறப்பட்டன. அத்துடன் மறைவட்ட புது இயக்குநர் தந்தையர்கள் தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டனர்.

**மறைவட்ட இயக்குநர்கள்**

| | |
|---|---|
| முதன்மை குரு | பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் |
| குருக்கள் செயலர் | அருட்தந்தை விபின்ஸ் வில்சன் |
| மரியாயின் சேனை | பேரருட்தந்தை மரியதாசன் |
| வின்சென் டி-பவுல் | பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் |
| விவிலிய பணிக்குழு | அருட்தந்தை பிபின் |
| பீடசிறுவர்கள், இறையழைத்தல் ஊக்குநர் | அருட்தந்தை ஆன்றோ ஜெபின் |
| பாலர் சபை | அருட்தந்தை ஜோஸ் கிராத்தூர் |
| மறைக்கல்வி | அருட்தந்தை விபின்ஸ் வில்சன் |
| MCA | பேரருட்தந்தை மரிய அற்புதம் |
| MCYM | அருட்தந்தை சுரேஷ் ஆன்றனி |
| Communication Media | அருட்தந்தை ஜாண் சிபு |

**மாத்தார், தூய மிக்கேல் அதிதூதர் குருசடி அர்ச்சிப்பு**

மாத்தார் பகுதியில் புனரமைக்கப்பட்ட தூய மிக்கேல் அதிதூதர் குருசடி அர்ச்சிப்பானது 06.07.2023 அன்று நடைப்பெற்றது. மாத்தார் பங்கின் உறுப்பினராகிய திரு. பாலையன் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு சொந்தமான இடத்தில் அமைக்கப்பட்டிருந்த குருசடியை மாத்தார் புனித சூசையப்பர் ஆலயத்திற்கு வழங்கினார்கள். இக்குருசடி புதுப்பிக்கப்பட்டு மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்களால் புது பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதில் எல்லா பங்குமக்களும், ஊர்மக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## நாகர்கோவில் மறைவட்டம்

**குருக்களுக்கான கூடுகை**

நாகர்கோவில் மறைவட்ட குருக்கள் கூடுகையானது 08/07/2023 அன்று மாலை சரியாக 3.30 மணிக்கு, பெருவிளை புனித தேவசகாயம்

திருத்தல வளாகத்தில், மறைவட்ட முதன்மை குரு, பேரருட்தந்தை ஜாண் குமார் அடிகளார் தலைமையில், துவக்க ஜெபத்துடன் ஆரம்பமானது. மறைவட்ட குருக்கள் செயலர் அருட்தந்தை ஜெபின் ஜாண், வருகை தந்த யாவரையும் வரவேற்று பேசினார். தொடர்ந்து மறைவட்ட முதன்மை குரு அவர்கள் புதிதாக மறைவட்டத்தில் பணி பொறுப்பெடுத்த அருட்தந்தை ராபர்ட் மற்றும் அருட்தந்தை அபின்சன் ஆகியோர்களை வாழ்த்தி வரவேற்றினார்கள். இக்கூடுகையில் புது மறைவட்ட இயக்குநர்கள் நியமிக்கப்பட்டனர்.

| | |
|---|---|
| முதன்மை குரு | பேரருட்தந்தை ஜாண் குமார் |
| ஊடகப்பணி (Media) | அருட்தந்தை இயேசுதாஸ் |
| MCA | அருட்தந்தை வில்பிரைட் |
| சமூக சேவைப் பணி மண்டல இயக்குநர் (Regional Director) | அருட்தந்தை இராபர்ட் |
| ஐக்கிய கிறிஸ்தவம், பக்த இயக்கங்கள் | பேரருட்தந்தை ஜாண் குமார் |
| மறைவட்ட குருக்கள் செயலர்<br>Family Apostolate, அருள் வாழ்வியம் | அருட்தந்தை அபின்சன் |
| Alter Boys<br>MCYM | அருட்தந்தை ஜெபின் ஜாண்<br>அருட்தந்தை சுனீஷ் குமார் |
| பாலர் சபை | அருட்தந்தை சில்ஜின் |

## கொல்லங்கோடு மறைவட்டம்

17-07-2023 அன்று புஷ்பகிரி தேவாலயத்தில் வைத்து கொல்லங்கோடு மறைவட்ட குருக்கள் கூடுகை நடைபெற்றது. இக்கூடுகையைப் புது மறைவட்ட இயக்குநர்கள் நியமிக்கப்பட்டனர்.

**மறைவட்ட குருக்களின் திருப்பணிகள் மற்றும் பொறுப்புகள் :**

| | |
|---|---|
| ஊடகப்பணி (Media), Labour Commission, மறைக்கல்வி | அருட்தந்தை ஜீவன் ஜார்ஜ் |
| MCYM | அருட்தந்தை ஜெஸ்டின் நுள்ளிக்காடு |
| MCCL | அருட்தந்தை சஜீவ் |
| பீட சிறுவர்கள், இறைஅழைத்தல் ஊக்குநர் | அருட்தந்தை Dr. ஜோஸ் சுந்தவிளாகம் |
| MCA | அருட்தந்தை ஸ்டீபன் பாலவிளை |
| அருள் வாழ்வியம், Family Apostolate | பேரருட்தந்தை மைக்கிள் முக்கம்பாலத் |
| Bible, சுவிசேஷ சங்கம் & Charismatic Movement | அருட்தந்தை ஜீவன் ஜார்ஜ்<br>அருட்தந்தை ஸ்டீபன் ஜாண் |
| குருக்கள் செயலர் | அருட்தந்தை ஜீவன் ஜார்ஜ். |



## ஆயரின் ஜூலை மாத நிகழ்வுகள்



2 ➢ வேர்கிளம்பி ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

2 ➢ ஆற்றூர் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

3 ➢ அம்பிலிக்கோணம் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

4 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற குருக்களுக்கான மாதாந்திர தியானத்தில் கலந்துக் கொண்டார்.

4 ➢ நாகர்கோவிலில் வைத்து நடைப்பெற்ற கிறிஸ்தவ ஐக்கிய பேரவை கூடுகைக்கு தலைமை தாங்கினார்.

5 ➢ கன்னியாகுமரி மாவட்ட அனைத்து சிறுபான்மையினர் கூட்டமைப்பு மற்றும் கிறிஸ்தவ ஐக்கிய பேரவை ஒருங்கிணைந்து மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகம் முன்பு மணிப்பூர் கலவரத்தை கண்டித்து நடத்திய மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துக் கொண்டார்.

5 ➢ மாத்தார் ஆலயத்தில் புதிதாக்கம் செய்யப்பட்ட குருசடியை அர்ச்சித்து அருளினார்.

6 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற ஆங்கில வழி பள்ளிக்கூட தாளாளர் மற்றும் நிதி காப்பாளர்களின் கூடுகைக்கு தலைமை தாங்கினார்.

6 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற மறைமாவட்ட கல்லூரிகளின் தாளாளர் மற்றும் நிதி காப்பாளர்களின் கூடுகைக்கு தலைமை தாங்கினார்.

6 ➢ இறை ஊழியர் பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவை முன்னிட்டு பட்டம் பேராலாயத்தில் திருப்பலி நிறைவேற்றி நினைவிடத்தில் தூப மன்றாட்டு நடத்தினார்.

7 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற St.Paul Education Academy-யின் கூடுகைக்கு தலைமை தாங்கினார்.

8 ➢ பாண்டித்திட்டை ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

9-11 ➢ கோயம்புத்தூர் மறைமாவட்டத்தில் நடைப்பெற்ற தமிழ்நாடு ஆயர் பேரவை கூடுகையில் கலந்துக் கொண்டார்.

12 ➢ முக்கடல் சாந்தி ஆசிரமத்தில் திருப்பலி நிறைவேற்றி Eparchial Pious Association என்ற நிலையில் இருந்து Monastery of Shanthi Ashram of Eparchial Right என்ற நிலைக்கு உயர்த்தினார்.

12 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற Marthandam People Development Nithi Ltd கூடுகைக்கு தலைமை தாங்கினார்.

13 ➢ மார்த்தாண்டம் பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இளையோர் இயக்கம் முன்னின்று நடத்திய 'Walk A Day with Mar Ivanious' பாதயாத்திரையை துவங்கி வைத்தார்.

14 ➢ இறை ஊழியர் பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவை முன்னிட்டு பட்டம் பேராலா யத்தில் வைத்து நடைப்பெற்ற மாலை மன்றாட்டு, தூப மன்றாட்டு, மெழுகுவர்த்தி பவனியில் கலந்து கொண்டார்.

15 ➢ இறை ஊழியர் பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவு நாள் திருப்பலி மற்றும் தூப மன்றாட்டில் கலந்துக் கொண்டார்.

16 ➢ உண்ணாமலைக்கடை ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.



## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01-8-2023 | | | | USA |
| 19-8-2023 | Saturday | | Rampan Pattom<br>Holy Mass | TVM<br>Triunelveli |
| 20-8-2023 | Sunday | 9.00 am | Holy Mass | Pilankalai |
| 21-8-2023 | Monday | 8.30 pm | Marriage Reception | TVM |
| 22-8-2023 | Tuesday | | Symbosium -<br>Msgr.Joesph Kuzhinjalil | |
| 23-8-2023 | Wednesday | | Ruby Jubilee of<br>Msgr.Joseph Kuzhinjalil | Marthandam |
| 27-8-2023 | Sunday | 2.30 pm<br>6.30 pm | Youth Meet<br>Shrine Blessings | CSI Kulasekharam<br>Nadaikavu |
| 28-8-2023 | Monday | 9.30 am | House Blessing | Nagercoil |

## பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை.
மரிய ஜாண்
ஆகஸ்ட் 04



அருட்தந்தை.
பெர்னார்ட்
ஆகஸ்ட் 20



அருட்தந்தை ஜாண் ஷிபு
ஆகஸ்ட் 29

## மறைமாவட்ட தினம் மற்றும் ஆயரின் பெயர்விழா கொண்டாட்டம்








## HOM Special School





## Health for One Million






## மார் இவானியோஸ் ஆண்டகையின் பாதயாத்திரை







## தூய மிக்கேல் அதிதூதர் குருசடி அர்ச்சிப்பு, மாத்தார்

## MIDS





## Vincent De-Paul